**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 61-2024**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Date | : | 17.06.2025 |
| Husband Name | : ஞானசேகரன் | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1 முதல் 3, 5 முதல் 8, 10 மற்றும் 11 எதிரிகள் ஆஜர். 4 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. (பிரிவு 355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது)

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் கிரயம் மூலம் வாங்கிய நிலமும், எனது கணவருக்கு உயில் மூலம் கிடைத்த நிலமும் அருகேருகே உள்ளது என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்தவர்கள் கனகசபை மற்றும் சிவபிரகாசம் ஆவார்கள். கனகசபை மற்றும் சிவபிரகாசத்திற்கு உயில் மூலம் சொத்து கொடுக்கபட்டுள்ளதா என்றால் இல்லை. எனது கணவரே ஏற்பத்திக்கொண்ட போலியான உயில் என்றாலும் அதனால் தான் அவரது சகோதரர்களுக்கு மேற்படி உயிலில் சொத்துகள் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

2. உயில் சொத்தானது எவ்வளவு ஆண்டு காலமாக எங்களது அனுபவத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். எனக்கு அது பற்றி தெரியாது. எனது கணவர் ஏற்கனவே பெரம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரிகளில் சிலர் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறார் என்றால் சரிதான். எனது கணவருக்கும் எதிரி காமாராஜ் என்பவருக்கும் இடையே இந்நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3. இடப்பிரச்சனை சம்பந்தமாக சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

அவர்களிடம் எனது கணவர் சிவில் சம்பந்தமான பிரச்சனை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் அதனால் அந்த இடத்தை அளக்க கூடாது என்றும் கூறினாரா என்றால் கூறினார். வருவாய் கோட்டாட்சியர் வந்தபோது அவர்களுடன் எங்களது கிராம நிர்வாக அலுவலரும் வந்தாரா என்றால் வந்தார்.

4. இடப்பிரச்சனை சம்பந்தமாக எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததா என்றால் இருந்தது. எனது கணவருக்கு உயில் மூலம் கிடைத்த சொத்தை தான் அந்தஊரில் வசிக்கும் 40, 50 குடும்பத்தினர் பிரதான சாலைக்கு செல்லும் வழியாக அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல. உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தினை பொறுத்து நான் கிராம புல வரைபடத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

5. எங்களது இடத்தில் இருந்த மரங்களை எல்லாம் நாங்களே வெட்டிவிட்டு எதிரிகள் வெட்டியதாக பொய்யான புகாரை கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களிடம் தகராறு செய்தபோது நாங்கள் எதிரிகளை திட்டினோமா என்றால் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் தான் சம்பவத்தினத்தன்று நடந்தது என்றால் சரிதான். எங்களுக்கு உயில் மூலம் கிடைத்த சொத்திற்கான இடத்தில் வரி ரசீதுகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.உயில் மூலம் கிடைத்த இடத்தில் அம்மா திட்டத்தின் கீழ் மாட்டுகொட்டகை கட்டி அனுபவித்து வருகிறோம். அம்மா திட்டத்தின் கீழ் மாட்டு கொட்டகை கட்டியதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் எனது கணவர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார்.

6. சம்பவம் நடந்த தேதி 16.08.2020 ஆகும். அன்றைய தினமே நானும் எனது கணவரும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நானும் எனது கணவரும் ஊருக்கு பொதுவான சொத்தை போலியான உயில் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்த ஆவணத்தின் படி அந்த சொத்தை ஆக்கிரமித்து ஊர் பொது மக்கள் பிரதான சாலைக்கு செல்லும் வழியை

நாங்கள் தடுத்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தை தடுத்து வைத்ததை ஊர்காரர்கள் எங்களிடம் கேட்டதற்காக நாங்கள் எதிரிகள் மீது பெரம்பூர் காவல் நிலையத்திலும், இந்நீதிமன்றத்திலும் பொய்யான புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.